விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 232 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (08.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 13வது திருத்தத்தை முற்றாக நீக்குக

விமல் வீரவன்ஸ

3ஆம் பக்கம் பார்க்க

## மின் கட்டணம் அதிகரிக்கப்படாது

5ஆம் பக்கம் பார்க்க

## தமிழினம் கல்வியைக் கைவிடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது

### தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

தமிழினம் கல்வியைக் கைவிடும் துர்ப்பாக்கிய நிலை தற்போது ஏற்பட் டுள்ளதாக சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

4ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் யாழ்.பல்கலைக்கழகம் எனும் பரமேஸ்வரா கல்லூரி தமிழ் மாணவர்களின் நலன் கருதியேஉருவாக்கப் பட்டது தமிழ் 16

## கடுமையான வரட்சி

# நாட்டின் பல இடங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடுமையான வரட்சி நிலை காரணமாக பல இடங்களில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலை தோன்றி யுள்ளது.

வரட்சியான காலநிலையானது தொடர்ந்து நீடிக்குமானால் நாட்டில் குடிநீருக்கான அபாயநிலை தோன்றும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

முல்லையில்

## 10 இந்திய மீனவர்கள் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - அளம்பில் பகுதியில் சட்டவிரோதமான வகையில் மீன்பிடி நடவடிக்கைகளில் 15

## 54 கிலோ கஞ்சாவுடன்

### காங்கேசன்துறையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் கடற் படையின் சோதனை நடவடிக் கையின்போது , 54 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ள 15

## சர்வகட்சி மாநாட்டை நடத்தி மக்களை முட்டாளாக்க முயற்சி

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

13ஐ முழுமையாக நடை முறைப்படுத்த ஆளும் தரப் புக்குள்ளேயே இணக்கப்பாடு ஏற்படாத நிலையில், சர்வ கட்சி மாநாட்டை நடத்தி மக் களை முட்டாளாக் கவே ஜனாதிபதி 15

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

### துன்னாலை மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலைமத்தி, கரவெட்டி பகுதியில், மதிலுடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத் துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் 15

## 54 வயது குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

### 19 வயது யுவதியுடன் காதல் எனக் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் 54 வயது டைய குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய் யப்பட்டுள்ளார்.

19 வயது யுவதியு 15

13 தொடர்பில்

## ரணில் நாளை விசேட உரை

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத் தில் நாளை விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

இதன்படிபொலிஸ் 16

தமிழ்த் தேசியக் கட்சியின்

## செயலாளர் பதவியிலிருந்து சிவாஜிலிங்கம் நீக்கம்?

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சியில் இருந்து அதன் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் நீக் கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி ரணில் இந்திய பயணிப்பதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர்,13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத் தக்கோரி, இந்திய 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ கணபதிசாமிக்குரு புருஷோத்தமக்குரு



**தோற்றம்** 30.07.1952 **மறைவு** 07.08.2023

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குருவும் "வல்லிபுராலயம்", துன்னாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும்வதிவிடமாகவும்கொண்ட சிவஸ்ரீ கணபதிசாமிக்குரு புருஷோத்தமக்குரு அவர்கள் நேற்று (07.08.2023) வல்லிபுர மாயவன் காலடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி சாமிக்குரு உருக்குமணியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர், புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் மருமகனும், ஸ்ரீமதி ரஜனி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லோகேஸ்வரி அம்மா இராமச்சந்திரக் குரு, சிவஸ்ரீ. க.சுதர்சனக்குரு, சிவஸ்ரீ க.இராமச்சந்திரக்குரு ஆகியோரின் சகோதரரும், நித்தியானந்தக் குருக்கள், ராஜேஸ்வரி சிவனாதக்குரு, சுவாமிநாத சர்மா ஆகியோரின் மைத்துனரும், வாசுகி (முகாமைத்துவ உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), சௌமியா (ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி), ராஜாராம் (கணக்காளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாபதிசர்மா ( அபிவிருத்தி உத்தியோகத்தர், MOH, பருத்தித்துறை) ஸ்ரீசந்திரமௌலிகரசர்மா (பொறியியலாளர், மலேசியா) விதுஜா (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்; ஸ்ரீநயா ( மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீநிதா (துன்னாலை, காசிநாதர் வித்தியாலயம்), சுபீக்ஷா (உடுவில் மகளிர் கல்லூரி), சாய்நிகேஷ், சாஸ்வதசர்மா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2023)அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக காலை 10 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தொ.பே:- 077 667 9565, 077 239 1964 (C-7028)

தகவல் - குடும்பத்தினர்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற தமிழியல் ஆய்வு மாநாடு

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சுந்தரலிங்கம்

(அச்சுவேலி குறிசொல்லும் வீரயோக ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா)

தாவடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு நாவலம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்லத்துரை சுந்தரலிங்கம் 07/08/2023 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-துரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் டிலக்ஷன்,லதுசன்,குருபரன் டிலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 09/08/2023 நாளை புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்

077 600 5597 (16658) குடும்பத்தினர்


# NORTH LANKA IIT CITY CAMPUS

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்

இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு (UGC), UNESCO, IAU மற்றும் WHED யின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களினால் சான்றிதழ் வழங்கப்படும்

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.08.2023 ஞாயிறு காலை 09.00 மணி**

## பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- **Bachelor of Education Top-Up - 1Year** — தகைமை : Diploma in Training College / College of Education
- **Master of Education - 1Year** — தகைமை : Bachelor of Education
- **M.Com with Computer Application - 1Year** — தகைமை : B.Com
- **Master of Business Administration - 1Year** — தகைமை : Any Degree
- **BSc in Computer Science Top-Up - 1Year** — தகைமை : Higher National Diploma in Information Technology (HNDIT)
- **BSc in Agriculture Science Top-Up - 1Year** — தகைமை : Diploma in Agriculture (2Years)
- **BSc in Physical Education and Sports Top-Up - 1Year** — தகைமை : Diploma in Physical Education (2Years)
- **Post Graduate Diploma in Public Administration-1Year** — தகைமை : Any Degree
- **Bachelor of Education - 3Years** — தகைமை : A/L 3 Passes
- **B.Com with Computer Application - 3Years** — தகைமை : A/L 3 Passes
- **Bachelor of Business Administration - 3Years** — தகைமை : A/L 3 Passes
- **BSc in Computer Science - 3Years** — தகைமை : A/L 3 Passes
- **MSc in Computer Science - 1Year** — தகைமை : Degree in Computer Science
- **BSc in Agriculture Science - 3Years** — தகைமை : A/L 3 Passes
- **BSc in Civil Engineering Top-Up - 1Year** — தகைமை : Diploma in Civil Engineering (2Years)
- **Doctor of Philosophy - 2 1/2 Years** — தகைமை : Any Master Degree

(C-7027)

விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளவும்

LANKA CITY CAMPUS
Station Road,
Vavuniya.
T.P: 0764886169

LANKA CITY CAMPUS
Mannar
T.P: 0767504535

NORTH LANKA IIT CITY CAMPUS
Top Floor,
People's Bank Building,
Jaffna.

T.P Number:
Rector 0767504535
Registrar 0778849677



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்காக நாடு துண்டாடப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

## 13 ஐ நீக்குவதே சிறந்தது என்கிறார் விமல்

(கொழும்பு)

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று நாம் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றோம்.

இந்த எச்சரிக்கையை மீறி ஜனாதிபதி செயற்படக் கூடாது.

நாட்டில் தற்போது 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கின்றது.

எனவே, அந்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்காக இந்த நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளியோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# திருமலையில் விமானம் விபத்து

## இருவர் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் பயிற்றுவிப்பவரும் பயிற்சியாளருமே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இலங்கை விமானப்படையின் சீனக்குடாவில் அமைந்துள்ள இலக்கம் 01 விமானப் பயிற்சிப் பிரிவின் விமானிகளுக்குப் பயிற்சியளிக்கப் பயன்படுத்தப்படும் PT 6 ரக விமானமே விபத்துக்குள்ளானது. (நி-5)

# மக்களால் தாங்க முடியாத அளவு உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உணவுப் பொருட்களின் விலை 128 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் தொடர்பில் சனத் தொகை புள்ளிவிபர திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு அல்லாத பொருட்களின் விலை மட்டம் 87 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராசிரியர் தெரிவித்தார்.

நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டத்தில் சராசரியாக நூற்றுக்கு மூன்று வீத அதிகரிப்பு காணப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# கடும் வரட்சி காரணமாக குடி நீருக்கு அலையும் கால்நடைகள்

(கொழும்பு)

கடும் வரட்சி காரணமாக வில்பத்து தேசிய வனப் பூங்காவில் உள்ள சிறிய ஏரிகள் பல வற்றில் நீர் வற்றியுள்ளது.

வில்பத்து தேசிய வனப் பூங்காவில் கிட்டத்தட்ட 106 ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளன.

ஏறக்குறைய அனைத்துமே காய்ந்து போனதுடன், வில்பத்து தேசிய வனப் பூங்காவில் வசிக்கும் விலங்குகளும் விலங்குகளுக்கு குடிநீர் கிடைக்காமல் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளன.

இது தொடர்பில், வில்பத்து தேசிய வனப் பூங்காவின் காப்பாளர் சுரங்க ரத்நாயக்க விடம் கேட்டபோது, தேசிய வனப் பூங்காவில் சுமார் 106 சிறிய ஏரிகள் உள்ளதாகவும் அவற்றில் ஐம்பது வீதமானவை கடும் வரட்சி காரணமாக வரண்டு விட்டதாகவும் தெரிவித்தார். (நி-5)

# இலங்கை வரும் பிரமுகர்களுடன் 'செல்பி' எடுக்க தடை விதிப்பு

## ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்து

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கைக்கு வருகை தரும் அரச தலைவர்கள் அல்லது பிரமுகர்களுடன் தனிப்பட்ட புகைப்படங்கள் அல்லது செல்பிகளை கோரவோ அல்லது எடுக்கவோ வேண்டாம் என ஜனாதிபதி செயலகம் பணியாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

மேலும் அவ்வாறான வருகைகள் பற்றிய எந்தவொரு தகவலும் அந்தந்த உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஜூலை 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, ஜனாதிபதி செயலக பணியாளர்கள், அவருடன் செல்பி எடுத்தது தொடர்பில் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பணியாளர்களால் எடுக்கப்பட்ட செல்பிகளை வெளியிட்டதன் மூலம் சமூக ஊடகங்களில் எதிர்மறையான கருத்துக்கள் எழுந்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவு வழங்க ஈரான் இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கு ஈரானிய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியுடனான சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையே சீராக வளர்ந்து வரும் உறவுகளைப் பாராட்டியுள்ளதுடன் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈரானிய நிறுவனங்கள் இலங்கையில் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் மருத்துவத் துறைகளில் இஸ்லாமிய குடியரசுடனான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த வெளிவிகார அமைச்சர் அலிசப்ரி விருப்பம் தெரிவித்துள்ளார். (நி-5)

# கோழி இறைச்சி உற்பத்திக்காக கால் பதிக்கும் இந்திய நிறுவனங்கள்

(கொழும்பு)

இலங்கையில் கோழி இறைச்சியை உற்பத்தி செய்ய இரண்டு இந்திய நிறுவனங்கள் தயாராகி வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்நாட்டு வர்த்தகர்களுக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் கோழிப் பண்ணை சந்தையில் போட்டி நிலவும் என விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் இலங்கை வந்தடைந்தார்



(கொழும்பு)

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

யுனிசெவ் அமைப்பின் கௌரவ தூதுவராகவும் செயற்படும் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலையொன்றிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். ஆளுநர் நவீன் திசநாயக்கவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமநிலை தவிர்ப்பு உதையில் சம்பியனானது இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம்



வடமாகாண விளையாட்டு திணைக்களம் சக்தி ரி.வி யின் ஊடக அனுசரணையுடன் நடத்தும் பிறிமியர் லீக் தொடரின் இறுதியாட்டம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பாடும்மீன் விளையாட்டு கழக அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டு அணி மோதியது இரு அணிகளும் சிறப்பாக விளையாடினர். ரசிகர்களின் கரகோசங்கள் மத்தியிலும் கோல் அடிக்க முயற்சித்த போதிலும் எவ்வித கோல்களும் போடாது சமநிலையில் ஆட்டம் முடிவுற்றதால் சமநிலை தவிர்ப்பு உதையில் 4-3 என்ற கோல் கணக்கில் யங் கென்றிஸ் அணி வெற்றி பெற்று 2023 இன் யாழ்.பிறிமியர் லீக் வெற்றி கிண்ணத்தை தனதாக்கி சம்பியனானது. (நி-5-106)

# கிளி.பீப்பிள் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் விளையாட்டு விழா





கிளி.பீப்பிள் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் விளையாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்து, கரம், பற்மின்ரன் என பல்வேறு விளையாட்டுக்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த விளையாட்டு விழாவில் பெருமளவான இளைஞர்.யுவதிகள் போட்டிகளில் ஆர்வத்துடன் தமது கழகங்கள் ஊடாக கலந்து கொண்டனர். (நி-5-100-316)


# தேசியமட்ட உதைபந்தாட்டத்தில் மகாஜனா மூன்றாமிடம்



இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனம் தேசிய மட்டத்தில் 14 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையே நடத்திய போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி மூன்றாமிடம் பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கனிகமுவா மத்திய கல்லூரிக்கு எதிராக போட்டியிட்டு 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டது. (நி-5)

## வலைப்பந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வு தர்ஜினி சிவலிங்கம் அறிவிப்பு



இலங்கையின் வலைப்பந்தாட்ட வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் சர்வதேச வலைப்பந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் தெரிவிக்கையில், “இலங்கை வலைப்பந்தாட்டத்திற்கு நான் பல வருடங்களாக பங்களித்துள்ளேன். இப்போது எனக்கு 45 வயதாகி விட்டது.

ஆசியாவில் எந்தப் பெண் வீராங்கனையும் நான் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட்ட அளவிற்கு ஈடுபட்டிருக்கவில்லை.

2023 உலக வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளின் பின் ஓய்வு பெற நான் தீர்மானித்துள்ளேன்” என இலங்கையின் வலைப்பந்தாட்ட வீராங்கனை தர்ஜினி தெரிவித்தார். (நி-5)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய பெண்கள் கிரிக்கெட் அணிக்கு தெரிவான மாணவிக்கு கௌரவிப்பு

19 வயதுப் பிரிவிற்குட்பட்ட தேசிய பெண்கள் கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் சுழிபுரம் பாண்ட வெட்டை காட்டுபுலம் இணைந்த கரங்கள் அமைப்பின் தலைவர் இராசேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் 19 வயது பிரிவிற்குட்பட்ட 30 பேர் அடங்கிய குழுவில் தெரிவு செய்யப்பட்ட சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவி செல்வராசா கிருஸ்ரிகா விற்கான கௌரவிப்பு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-30)

# உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத்தில் அவுஸ்திரேலியா மகுடம் சூடியது

தென் ஆபிரிக்காவின் கேப்டவுன் இன்டர்நெஷனல் கொன் வென்ஷன் சென்டர் உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை 61 - 45 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்ட அவுஸ்திரேலியா தங்கப் பதக்கத்தை சுவீகரித்து மீண்டும் உலகக் கிண்ண வலை பந்தாட்ட சம்பியனானது. உலகக் கிண்ண வலைபந்தாட்டத்தில் அவுஸ்திரேலியா சம்பியனானது இது 12 ஆவது தடவையாகும்.

உலகக் கிண்ண வலை பந்தாட்ட வரலாற்றில் முதல் தடவையாக இறுதிப் போட்டியில் விளையாடிய இங்கிலாந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமாஃபோசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணித் தலைவி லிஸ் வொட்சனிடம் கையளித்தார். ஞாயிறன்று நடை பெற்ற மற்றொரு போட்டியில் 2019 சம்பியன் நியூஸிலாந்தை 52 - 45 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி கொண்ட ஜெமெய்க்கா வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டது.

கேப்டவுனில் 10 தினங்கள் நடைபெற்ற உலகக் கிண்ண வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அதி சிறந்த வலைபந்தாட்ட வீராங்கனையாகவும் · அதி சிறந்த எதிர்த்தாடும் வீராங்கனையாகவும் இங்கிலாந்தின் கோல்நிலை எதிர்த்தாடும் வீராங்கனை ஹெலன் ஹூஸ்பி தெரிவு செய்யப்பட்டார்.

அதிசிறந்த மத்திய கள வீராங்கனையாக நியூஸிலாந்தின் கேட் ஹெஃப்னானும் சிறந்த தடுத்தாடும் வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் கேர்ட்னி ப்றூசும் தெரிவாகினர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்படமாட்டாது

## அமைச்சர் காஞ்சன தகவல்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிக்கப் போவதில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணத்தை அரசாங்கம் உயர்த்தவுள்ளதாக பல்வேறு கருத்துக்கள் வெளியாகி வரும் நிலையில், இந்த ஆண்டில் மின்கட்டணத்தை மீண்டும் உயர்த்தப் போவதில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மாத்திரம் மின்சார கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதே அரசாங்கத்தின் தீர்மானம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிட்டபடி தடையின்றி மின் விநியோகத்தினை மேற்கொள்வதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கை மின்சாரசபையானது நீர்ப்பாசன திணைக்களத்துடன் நேற்று முன்தினம் சந்திப்பொன்றில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது தடையின்றி மின் விநியோகத்தை அமுல்படுத்துவது மற்றும் விவசாயத் திற்குத் தேவையான அதிகபட்ச நீரை உறுதி செய்வது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தின்போது கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தமது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# சில பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்க தீர்மானம்



(கொழும்பு)

அடுத்த இரு வாரங்களில் சில பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படவுள்ளதாக சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகித அறிக்கையில் இந்த மாற்றம் பதிவாகியுள்ளது.

இதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 312.55 ரூபாவில் இருந்து 315.05 ரூபாவாகவும், விற்பனை பெறுமதியானது 326.65 ரூபாவில் இருந்து 328.57 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் சரிந்துள்ளது. ஆனாலும், வளைகுடா நாணயங்களுக்கு எதிராக இதன் மதிப்பு நிலையாகவுள்ளது.(நி-5)

# லொத்தர் பரிசு பெற்றவரைக் கடத்திய மர்ம கும்பல்

(கொழும்பு)

இலங்கையில் ஏழரைக் கோடி ரூபா பெறுமதியான லொத்தர் பரிசு பெற்ற நபரை கடத்திச் சென்ற கும்பலொன்றை கம்பளை விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் கம்பளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

கண்டி அக்குறணை பிரதேசத்தில் வசிக்கும் லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவரைக் கடத்தி, கம்பளையில் உள்ள வீடொன்றில் பத்து நாட்களாக அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி தம்புள்ளையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் கம்பளை பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து அவர் கொடூரமாக தாக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் மரக்காலை உரிமையாளரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

# தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்

(கொழும்பு)

தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு உள்ளாவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக் குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்பநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக தெற்காசியாவில் 4 சிறார்களில், 3 பேர் ஏற்கனவே அதிக வெப்பநிலைக்கு ஆளாகியுள்ளனர். உலகளவில் ஜூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும். தெற்காசியாவில் உள்ள நாடுகள் உலகில் அதிக வெப்பமான நாடுகள் அல்ல.

ஆனால் தற்போது தெற்காசியாவில் நிலவும் வெப்பம், பாதிக்கப்படக்கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெஃப் இன் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி-5)




8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.திரு

மாணிக்கம் சண்முகராஜா

(கில்லுத்தகடு இராஜன், இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம் 24.05.1955 | திதி:- 08.08.2023 | மறைவு 08.08.2015

உலக வாழ்வு நிலையில்லாதது என்பதை யாமறிவோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(16624)

82/17, 3 ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


# இராசிபலன்

08.08.2023
ஆடி 23, செவ்வாய்க்கிழமை
சப்தமி முற்பகல் 10.27 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.49 மணிவரை
சுபநேரம் -10.34-12.04 மணிவரை
இராகுகாலம்-3.04-4.34 மணிவரை

சந்திராஷ்டமம்- அத்தம்

வளவன்

**மேஷம்** – திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர்.

**கடகம்** – கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஒளிமயமான வாழ்வுக்கு உறுதுணை புரியும் நாள், செய்தொழில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** – நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** – புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** – தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** – எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்** – சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** – தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** – மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு** – உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** – வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

உண்மையைத் தவிர வேறு எதுவுமே அழகில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரட்சியுடன் கூடிய காலநிலையால் யாழில் சுமார் 70 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**வரட்சியுடன் கூடிய கால நிலை காரணமாக யாழ் மாவட்டத்தில் 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது யாழ்மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியுடன் கூடிய கால நிலை காரணமாக இதுவரை 21,714 குடும்பங்களைச் சேர்ந்த 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15,965-குடும்பங்களைச் சேர்ந்த 49,160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3,135 குடும்பங்களைச் சேர்ந்த 11,160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1,028 குடும்பங்களைச் சேர்ந்த 3,146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3,067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது 6,053 குடும்பங்களைச் சேர்ந்த 19,704 பேருக்கு குடிநீர் விநியோகத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5-33)



வடமாகாணத்தில் தமிழில் முதல் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்ற செல்வி சாந்தா அபிமானசிங்கம் அவர்களுடைய 45 ஆவது நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் சிரேஷ்ட சட்டத்தரணி கு.குருபரன் தலைமையில் நடைபெற்றது. (படம்: கஜிந்தன்)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நினைவிடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அமைக்கப்பட்ட நூற்றாண்டு நினைவிடத்திறப்பு விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் கலாநிதி கே.ஏ.டி. புண்யதாசவும் சிறப்பு விருந்தினர்களாக ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் ஶ்ரீமா தசநாயக்கா தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பணிப்பாளர் களனி ஹேமாலி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுநரும் முன்னாள் ஆசிரிய கல்விபணிப்பாளருமாகிய சுவர்ணா நவரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-33)

# இனம், மதம், மொழிகளை கடந்து சகலரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்

## பேராசிரியர் வேல் நம்பி

(சாவகச்சேரி)

சமூகத்தில் எல்லோரும் எல்லோரையும் ஏற்றுக் கொள்கின்ற நிலைமை உருவாகின்ற போது சமாதானம் மற்றும் ஒற்றுமைப்படுத்தல் முயற்சிகள் தேவைப்படாது என யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்படி அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு காலத்தில் வீட்டில் மூத்தவர்கள் இருந்தனர்.

மூத்தோர்கள் கூட்டுக் குடும்பமாக இருந்த போது இலக்கியங்களில் இருக்கும் நல்ல விடயங்களை இளம் தலைமுறைக்கு புகட்டி வந்தனர்.

ஆனால் இன்று எமது இளம் சமுதாயத்திற்கு அந்த வாய்ப்புக்கள் இல்லை. முதியோர் இல்லங்களே அதிகரித்துக் காணப்படுகின்றன.

இன்று கால ஓட்டத்தால் கூட்டுக் குடும்ப முறை உடைபட்டு தனித்தனிக் குடும்பங்களாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிள்ளைகளுக்கு வாசிப்பில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டியது பெற்றோர்களது கடமை.வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கும் போது பிள்ளைகளுடைய பண்பாடு மேம்படும்.

இன்றைய மாயா உலகத்தில் மாயைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க முற்படும் போது உண்மைகள் அடிபட்டுப் போகின்றன.பல இடங்களில் உண்மைகளும், திறமைகளும் அமுக்கப்பட்டு பொய்மைகளை மேலே கொண்டு வருகின்ற நிலைமை காணப்படுகின்றது.

எனவே ஓர் விடயத்தை ஆராய்ந்து உண்மையை எடுத்துக்கொள்கின்ற மனப் பக்குவத்தை பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

பிறர் சொல்வதனை உள்வாங்காமல் சுயமாக பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுக்கும் போது எல்லோருடைய பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் மற்றும் கலாசார பல்வகைமையை மதிக்கும் நிலை ஏற்படும்.

அந்த நிலை ஏற்பட்டால் இனம்,மதம்,மொழி என்ற நிலைமைக்கு அப்பால் சகலரும் ஒற்றுமையாகவும், மற்றவர்களுடைய விழுமியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களையும் இந்த சமூகத்தில் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகும்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் சமாதானம்-ஒற்றுமைப்படுத்தல் முயற்சிகள் தேவைப்படாது.

இப்படிப்பட்ட வாழ்வியல் தான் இன்றைய கால கட்டத்திற்கு தேவைப்படுகின்றது. என மேலும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். (நி-5-30)

# கல்வியில் அரசியல் தலையீடு; நிறுத்தாவிட்டால் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(அராலி)

வட மாகாண ஆளுநர் வட பகுதியின் கல்வியை அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டை கைவிடாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்கு தள்ளப்படுவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்தார்.



நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களை சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கல்வி ஆசிரிய இடமாற்றங்களில் இடமாற்றச் சபையின் அறிவுறுத்தல்களை மீறி ஆளுநர் இடமாற்றங்களை வழங்குவதாக அறிகிறோம் .

வடபகுதியின் கல்வியின் நிர்வாக செயற்பாடுகள் சுதந்திரமாகவும் வினைத்திறனாகவும் நடப்பதற்கு ஆளுநர் இடையூறு ஏற்படுத்தக் கூடாது.

அது மட்டும்மல்லாது வடக்கில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு ஊழல்வாதிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

மேலும் ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் திட்டத்திற்கு சுமார் 2285 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிலையில் வடக்கிலும் தேசிய பாடசாலைகள் என சுவர்களில் எழுதி திறப்பு விழா செய்தார்கள். தேசிய பாடசாலைகளாக 22 பாடசாலைகள் மட்டுமே உள்வாங்கப்பட்ட நிலையில் எஞ்சிய பணத்துக்கு என்ன நடந்தது.

ஆகவே வடபகுதியின் கல்வியை அரசியல் மயமாக்குவதற்கு வடமாகாண ஆளுநருக்கு இடமளிக்க மாட்டோம் என்பதுடன், அவர் தனது செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்திற்கு தள்ளப்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-104)





மாவை கலட்டி கொல்லன் கலட்டி கணேசா முன்பள்ளியின் சிறுவர் சந்தை நேற்று திங்கட்கிழமை முன் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு மரக்கறிகளை வெளிநாடுகளில் இருந்து

# இறக்குமதி செய்ய அனுமதியில்லை

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான சான்றிதழ்களை அங்கீகரிக்கும் அதிகாரம் விவசாய அமைச்சுக்கு இருக்கும் வரை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, தற்போது, இறக்குமதி செய்யப்படும் காய்கறிகள், பழங்கள், இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான உணவு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான சான்றிதழ்கள், விவசாய அமைச்

**அமரவீர**

சுடன் இணைக்கப்பட்டுள்ள பிரிவினால் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக எந்த ஒரு விவசாயியும் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம்.

நாட்டில் போதுமான அளவு மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன், நாட்டில் காய்கறிகளுக்கு பஞ்சமில்லை.

அண்மையில் உள்ளடக்கப்பட்ட சுமார் 300 பொருட்களின் இறக்கு மதிக்கான கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கிய பின்னர் கவலைகள் எழுந்துள்ளது.

இவ்வாறு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள போதிலும் பல விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் விளைவிக்கக் கூடிய மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சு அனுமதி வழங்காது என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 400 |
| தக்காளி | 250 | 250 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 230 | 220 | 300 |
| கோவா | 200 | 250 | 280 | 300 |
| கரட் | 250 | 480 | 540 | 600 |
| பூசணி | 100 | 120 | 100 | 140 |
| புடோல் | 80 | 70 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 120 | 70 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 230 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 200 | 180 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 300 | 200 |
| போஞ்சி | 450 | 450 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | --- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 220 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 70 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 50 | 100 |


# பெறுகை அறிவித்தல்
# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 01.09.2023ஆம் திகதி தொடக்கம் 29.02.2024ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2023/02 | சுகாதாரச் சேவை | 04 | 6,000.00 | 06.11.2023 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 024 324 3544 தொலைநகல் 021 205 0036 மின்னஞ்சல் pallaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் **08.08.2023 தொடக்கம் 20.08.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை** பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **08.08.2023 தொடக்கம் 20.08.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக **ரூபா 2,000.00(VAT,NBT நீங்கலாக)**இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் **21.08.2023ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **14.08.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

திருமதி.தர்சினி தயானந்தன்,
தலைவர்,பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,பளை,
08.08.2023

(சி-7025)



# நல்லூர் பிரதேச சபை

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை
(துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) 01.09.2023 ஆம் திகதி தொடக்கம் 31.12.2023 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி கோரப்பட்டுள்ளன.

குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | 2023 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற் வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 5,000.00 | 562,500.00 |

1. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 09.08.2023 திகதியிலிருந்து 15.08.2023 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மேற்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளும் செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 16.08.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. கேள்விப்பத்திரம் 16.08.2023 திகதி மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் திறக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் அரைப்பகுதியை 23.08.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
6. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-7024)


செயலாளர்,நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் 2023.08.08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 172

## மனிதர்களின் மனோபாவம்



ஒருவன் என்னிடம் கோடிகணக்கில் பணம் உள்ளது. தேவை உள்ள மக்களே திரண்டு மெரினா பீச்சுக்கு வாருங்கள் என அறிவித்தான்.

மக்களும் லட்சக்கணக்கில் திரண்டனர்..

அப்போது அங்கே வருகை தந்த அந்த கோடிஸ்வரன் ஒரு அறிவிப்பை வெளியிட்டான்.

என்னிடம் எல்லோருக்கும் கொடுக்கும் அளவிற்கு பணம் உள்ளது. ஆகவே யாரும் அடித்துக் கொள்ளாமல் வரிசையாக நில்லுங்கள் என்றானாம்.

உடனே அனைவரும் வரிசையாக நின்றனர். வரிசை செங்கல்பட்டு வரை நீண்டது.

அப்போது மீண்டும் ஒரு அறிவிப்பை வெளியிட்டான் அந்த கோடிஸ்வரன். அதாவது முதலில் நிற்பவருக்கு ஒரு ரூபாயும், இரண்டாவதாக நிற்பவருக்கு இரண்டு ரூபாயும்.. ஆயிரமாவதாக நிற்பவருக்கு ஆயிரம் ரூபாயும், லட்சமாவதாக நிற்பவருக்கு ஒரு லட்சம்ரூபாயும் என கண்டிசன் போட்டு விட்டு ஒவ்வொருவராக வாருங்கள் என அழைத்துள்ளான்.

முதலில் நின்றவர் "இங்கு என்ன நடக்கிறது" என்று ஒதுங்கிவிட்டார்.

இரண்டாவதாக நின்றவர் டீ குடிக்க போறேன் என்று சென்று விட்டார்.

மூன்றாவதாக நின்றவரும் நகர்ந்து விட்டார்.

இப்படியே முதலில் ஒதுங்கிய மூன்று பேரும் நாம் பஸ் பிடித்து செங்கல்பட்டு சென்று அங்கே கடைசியாக இணைந்து கொள்வோம் என்று பேசிக்கொண்டார்கள்.

இப்படியே யாருமே உதவிகள் பெற வரவே இல்லை....

## உக்ரைன்-ரஷ்ய போரில் தீவிரமடையும் தாக்குதல்கள்

(கீவ்)

கருங்கடலில் ரஷ்ய டேங்கர் மீது கீவ் நடத்திய தாக்குதலை தொடர்ந்து ரஷ்ய மற்றும் உக்ரைனிய படைகள் தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. ஒரே இரவில் தீவிரம் வான் வழி தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது சுமார் மூன்று பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சவுதி அரேபியாவில் உக்ரைனில் போரை எப்படி முடிவுக்கு கொண்டுவருவது என்பது குறித்து சீனா,இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட 40 நாடுகளின் மூத்த அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்திய நிலையில் கடந்த சனிக்கிழமை மாலை இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதே வேளை கிழக்கு நகரமான குப்யான்ஸ்க் இல் இடம்பெற்ற இரத்த மையத்தின் மீதான தாக்குதலுக்கு உக்ரைனிய அதிகாரிகள் ரஷ்யாவை குற்றம் சாட்டியுள்ளனர்.

அதே நேரத்தில் மொஸ்கோவில் கடமையிலுள்ள அதிகாரிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள டோனெட்ஸ்க் பகுதியில் ஷெல் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டினார்கள்.

கார்கிவ் பிராந்தியத்தில் உள்ள குபியான்ஸ்க் மீதான தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் பிராந்திய இராணுவ நிர்வாகத்தின் தலைவர் ஓலெ சினிஹுபோவ் தெரிவித்துள்ளார். (நி-5)

## கனடாவில் வரட்சியான பகுதிகளில் பரவும் ஆபத்தான பங்கஸ் வகை நோய்

(ஒட்டாவா)

காலநிலை மாற்றம் காரணமாக கனடாவில் ஆபத்தான நோய் ஒன்று பரவுவதாகவும் இந் நோய் பங்கஸ் வகை ஒன்றினால் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெலி ஃபீவர் என்று அழைக்கப்படும் இந்த நோயானது தற்பொழுது கனடாவிலும் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடுமையான வரட்சி நிலவும் பகுதிகளிலே இந்த நோய் பரவுகை காணப்பட்டது.

குறிப்பாக பாலைவனப் பகுதிகளில் இவ்வாறான நோய் பரவுகை அவதானிக்க முடிவதாகவும் உலக அளவில் காலநிலை மாற்றத்தினால் தற்பொழுது இந்த காய்ச்சல் பரவி வருவதாகவும் வெறும் கண்ணுக்கு தென்படாத இந்த பங்கஸ் வேகமாக பரவக்கூடியது என தெரிவிக்கப்படுகிறது. கடுமையான வெப்பநிலை நிலவும் பகுதிகளில் ஏற்படக்கூடிய இந்த காய்ச்சல் தற்பொழுது கனடாவின் சில பகுதிகளிலும் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## சீனாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் 21 பேர் படுகாயம், 26 கட்டிடங்கள் சேதம்



(பீஜிங்)

சீன நாட்டின் ஷான்டாங் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 5.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கத்தால் 26 கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும், 21 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கத்தின் போது தூக்கத்திலிருந்த மக்கள் கண்விழித்து வீடுகளை விட்டு வெளியேறி வீதியில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் சில இடங்களில் வீடுகள் இடிந்து சேதமாகி உள்ளன.

மேலும் அங்கு மீட்பு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. அதிர்ஷ்டவசமாக உயிர் பலி எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அந்நாட்டின் நிலநடுக்க அதிர்வை பதிவு செய்யும் மையம் உறுதி செய்துள்ளது.

அதாவது சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இருந்து சுமார் 300 கிலோமீற்றர் தெற்கு பகுதியில் டெசோ நகர் அமைந்துள்ளது.

இந்த நகரிலிருந்து தெற்கே 26 கிலோ மீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் அதிகாலை 2.33 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 5.5 என்ற அளவில் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், நிலநடுக்கத்தின் எதிரொலியாக பெய்ஜிங்-ஷாங்காய் ரயில்கள் மற்றும் பெய்ஜிங்-கௌலூன் ரயில்கள் உள்ளிட்ட சில வழித்தடங்களின் போக்குவரத்து சேவைகளை சீனா ரயில்வே இடைநிறுத்தியுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-5)

## பாகிஸ்த

## 25 பேர் உ

(இஸ்லாமபாத்)—
பாகிஸ்தானில் ரயி
விபத்துக்குள்ளானத
ரிழந்துள்ளதுடன் 5
மானோர் படுகாய
ளனர்.

பாகிஸ்தானின் கராச்சியிலிருந்து 275 கிலோமீற்றர் தொலைவில் இந்த ரயில் விபத்து இடம் பெற்றுள்ளது. கராச்சியில் இருந்து

## படகு மூழ்கி



(தூனிஸ்)
துனிசியாவின் கெர்கென
படகு கடலில் மூழ்கியதில்
அத்துடன், 50இற்கும்
என அந்த நாட்டின் நீதித்

## இரண்டாயிரத்து
## பங்களாதேஷில்

(டாக்கா)
பங்களாதேசத்தில் கடந்த சனி
மேற்பட்டோர் டெங்குவால் பா
டுள்ளது. டாக்கா ஒவ்வொரு வரு
வரை பங்காளதேசத்தில் பருவ
பருவமழைக் காலத்தில்
பாதிப்புக்கு உள்ளாகும் நாடாக
கடந்த ஜூன் மாதம் அதிக அ
பங்காளதேசம் முழுவதும் டெ
வருகிறது. நடப்பாண்டில் ஜன
64 ஆயிரத்திற்கும் மேற்பட்
உள்ளாகியுள்ளனர்.
303 பேர் தீவிர காய்ச்சல் பா
சனிக்கிழமை மட்டும் 2 ஆயிரத்
பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நா
வெளியிட்டுள்ளது. மருத்து
பெற்றுவரும் நிலையில் நோய்
சுகாதாரத்துறை தரப்பில் கூறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஸ்தானில் தடம்புரண்டது ரயில்!
## ர் உயிரிழப்பு, சுமார் 50 பேர் படுகாயம்

(...ாத்)

**...ில் ரயில் தடம் புரண்டு ...ளானதில் 25 பேர் உயி...டன் 50 இற்கும் அதிக ...டுகாயம் அடைந்துள்**





லி
லை
ம்
து

ராவல்பிண்டிக்கு சென்ற ஹசர்ா எக்ஸ் பிரஸ் ரயில் ஷஹசாத்பூர் மற்றும் நவப்ஷாஸ் பகுதிகளுக்கு இடையே உள்ள சஹரா ரயில் நிலையத்திற்கு அருகே திடீரென்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

தடம் புரண்டதில் ரயிலின் 10 பெட்டிகள் கவிழ்ந்தன. இதன்போது இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 50பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பாகிஸ்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாமெனவும் பாகிஸ்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-5)

# ...ழ்கியதில் 4 பேர் பலி



...ன் கெர்கென்னா தீவில் புலம்பெயர்ந்தோர் ...ழ்கியதில் நான்கு பேர் உயிரிழந்தனர். ...50இற்கும் அதிகமானோரை காணவில்லை ...டின் நீதித்துறை சார்ந்த ஒருவர் தெரிவித்ததாக அந்தநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துனிசிய கடலோர காவல் படை இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 20ஆம் திகதி வரை கடலில் மூழ்கிய 901 பேரின் உடலங்களை மீட்டுள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

வட ஆபிரிக்கா நாடான துனிசியா இந்த ஆண்டு வரலாறு காணாத புலம் பெயர்தோரின் உயிரிழப்புகளை சந்தித்துள்ளது.

ஆபிரிக்காவில் இருந்து இத்தாலிய கடற்கரைக்கு செல்லும் புலம்பெயர்ந்தோரின் படகுகள் அடிக்கடி கடலில் விபத்துக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## ...யிரத்துக்கு மேற்பட்டோர் ...தஷில் டெங்குவால் பாதிப்பு

...ில் கடந்த சனிக்கிழமை மட்டும் 2 ஆயிரத்துக்கும் ...ங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் ...வ்வொரு வருடமும் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் ...சத்தில் பருவமழைக் காலமாக கருதப்படுகிறது. ...காலத்தில் கொசுக்களால் அதிக அளவு நோய் ...ாகும் நாடாகவும் பங்காளதேசம் விளங்குகிறது. ...ம் அதிக அளவு மழைப்பொழிவு ஏற்பட்டதால் ...ழுவதும் டெங்கு காய்ச்சல் மிக வேகமாக பரவி ...ண்டில் ஜனவரி முதல் இதுவரை அந்த நாட்டில் ...ம் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்கு ...ர்.

... காய்ச்சல் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். கடந்த ...டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்குவால் ...தாக அந்நாட்டின் சுகாதாரத்துறை அறிவிப்பு ...து. மருத்துவமனைகளில் பலர் சிகிச்சைப் ...லயில் நோய் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ...ரப்பில் கூறப்படுகிறது. (நி-5)

## மொரொக்கோவில்
# பேருந்து கவிழ்ந்து விபத்து 24 பேர் உயிரிழப்பு



(ரபாட்)

மொரொக்கோ நாட்டில் உள்ள மத்திய மாகாணமான அஜிலாலில் மிக மோசமான வீதி விபத்து நடந்துள்ளது. இந்த விபத்தில். 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

அஜிலாலில் உள்ள டெம்னேட் நகரில் நடைபெற்ற வாராந்திர சந்தைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து வளைவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை தொடங்கியுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மொராக்கோ உட்பட பிற வட ஆபிரிக்க நாடுகளின் வீதிகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அந் நாட்டில் உள்ள பல ஏழை குடிமக்கள் கிராமப்புறங்களில் பயணம் செய்ய மினி பஸ்களைப் பயன்படுத்துகின்றனர்.

மொராக்கோவில் ஆண்டுதோறும் சராசரியாக 3,500 வீதி இறப்புகள் மற்றும் 12,000 காயங்கள் பதிவு செய்யப்படுகின்றன. தேசிய வீதிபாதுகாப்பு அமைப் பின்படி. சராசரியாக ஒரு நாளைக்கு 10 இறப்புகள் பதிவாகின்றன. (நி-5)

# மேற்கு ஆபிரிக்க நாடுகளின் காலக்கெடுவை உதாசீனம் செய்து வான் பரப்பை மூடிய நைஜர்

(நைஜர்)

பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஜனாதிபதியிடம் மீண்டும் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கான மேற்கு ஆபிரிக்க நாடுகளின் காலக்கெடுவை நிராகரித்துள்ள நைஜரின் இராணுவதலைவர்கள் தங்கள் வான்பரப்பை மூடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத் திடமிருந்து அச்சுறுத்தல் உள்ளதாக தெரிவித்துள்ள இராணுவ ஆட்சியாளர்களின் அதிகாரியொருவர் வான்வெளியை மூடுவது குறித்து அறிவித்துள்ளார்.

இராணுவவீதியில் தலையிடுவதற்கு இரண்டு மத்திய ஆபிரிக்க நாடுகளில் படையினர் தயார் நிலையில் உள்ளனர் என இராணுவ ஆட்சியாளர்களின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகள் தயாராகும் விதத்திலிருந்து பெரும் தலையீடு இடம்பெறப் போவது உறுதியாகின்றது இதன் காரணமாக நேற்று முன்தினம் முதல் நைஜரின் வான்வெளி மூடப்படும் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

நைஜரின் இராணுவத்தினரும் எங்கள் பாதுகாப்பு படையினரும் எங்கள் மக்களின் ஆதரவுடன் எங்கள் பிரதேசத்தின் ஆட்புல ஒருமைப்பாட்டினை காப்பாற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## "எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே!"

# பெரும்பான்மையினரின் அத்துமீறலை நிறுத்தக்கோரி

# முல்லைத்தீவில் கண்டனப் போராட்டம்

(நெளுக்குளம்)

**குமுழமுனை தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களை கைது செய்தமையை கண்டித்தும் அவர்களை விடுவிக்கக்கோரியும் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**





குறித்த போராட்டமானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுழமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும் ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர, சம்பத் நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி கடந்த சனிக்கிழமை மீன்பிடியில் ஈடுபட்டதை தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒன்பது பேர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர். இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபும், குமுழமுனை, தண்ணிமுறிப்பு சங்கத்தினை சேர்ந்த 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பொது மக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

குறித்த பேராட்டத்தில் பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்கள் தப்பி சென்றது எப்படி?, உயிர் போனாலும் உரிமையை விட்டு கொடுக்கோம், தமிழ் தேசத்தில் தமிழருக்கு உரிமை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே, சட்ட பூர்வ தொழிலாளர்களை கைது செய்தது எவ்வாறு, நிறுத்து நிறுத்து பெரும்பான்மையினரின் அத்து மீறலை நிறுத்து, சட்டத்தை மீறி தொழில் செய்வோரை தண்டிக்க யாரும் இல்லையா? அரச அதிகாரிகளே, தமிழ் பேசும் மீனவர்களின் உடமைகளை நாசமாக்காதே, சட்ட விரோத தொழிலாளருக்கு பொலிஸார் உடந்தையா? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பாதாதைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தின் பின்னர் தமிழ் பேசும் மீனவ சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அடங்கிய மகஜர் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அரசாங்க அதிபர் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி பிரச்சினையை கதைத்ததன் பின்னர் நிரந்தர தீர்வினை பெற்றுத்தர முயற்சி செய்வதாகவும் கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பதாகவும் தெரிவித்திருந்தார். (நி-5-316-299)

# மன அழுத்தங்களில் இருந்து விடுபட வீட்டுத்தோட்டம் சிறந்த பரிகாரம்

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

(அராலி)

எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களினால் மன அழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை.

போதை, வன்முறை என்றும் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள்." இவர்களை மன, அழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத் தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். "இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும் எனத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்கஉழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும் உணவு நெருக்கடிக்கும் வீட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும்.

இந்த அனுகூலங்களை விட மேலான அனுகூலமாக வீட்டுத்தோட்டங்கள் மனதை அலைபாய விடாமல் சிந்தனைகளை ஒரு முகப்படுத்தவும் உதவுகின்றது.

தோட்டங்களில் மண்ணைக் கைகளினால் அளையும்போது, மண்ணில் [illegible] பக்றீரியங்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. இது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை.

ஆசிரியர்கள் வீட்டுத்தோட்டம் என்றால் அது விவசாயம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று நினைக்கிறார்கள்.

பெற்றோர்கள் வீட்டுத் தோட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்களின் படிப்புப் பாழாகிவிடும் என்று கருதுகிறார்கள். இந்த மனோநிலைகளில் மாற்றம் வேண்டும்.

புத்தகப் பூச்சிகளாகவே வளரும் மாணவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் கேடாகவே அமைவார்கள்.

இதைப் புரிந்துகொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை வீட்டுத்தோட்டங்களில் ஈடுபட வைக்க வேண்டும் என்றும் குறி [illegible]

# இலத்திரனியல் கழிவுகளை சேமிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்







(கண்டாவளை)

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிக்கும் ஒரு வார கால நிகழ்ச்சி திட்டம் நேற்று வட மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (நி-315-285)



அணைமையில் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம் பெற்ற இ.லோகானந்தனின் "லயத்துக் கோழிகள்" நெடு நாடக ஆற்றுகையின் காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு
**மணமகள் தேவை**

| | |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.ப: 16 3/4<br>உயரம்: 5' 5<br>தகைமை/தொழில்:BBA,MBA,DO<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம். ஆசிரியர்<br>தொ.இ: B/13879 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.ப: 47<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: BA,Sales Exective<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ:B/13883 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.ப: 42<br>உயரம்: 6' 2"<br>தகைமை/தொழில்: Bsc,Soft ware engineer<br>எதிர்பார்ப்பு: A/L, Diploma, Degree<br>சைவபோசனம்.<br>தொ.இ: B/13880 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 62<br>தகைமை/தொழில்<br>வைத்தியர்(நெதர்லாந்து)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13884 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 174 Cm<br>தகைமை/தொழில்: Restaurant Owner (Canada)<br>எதிர்பார்ப்பு: நல்லகுணமுள்ள பெண்.<br>தொ.இ: B/13881 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 36<br>உயரம்:166Cm<br>தகைமை/தொழில்: Banker<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ:B/13888 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5' 10<br>தகைமை/தொழில்: BBA,கணனி விற்பனை owner<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ,அரச உத்தியோகம்.<br>தொ.இ: B/13882 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:168 Cm<br>தகைமை/தொழில்: A/L சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/13891 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு


## வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

# நட்டஈடு வழங்க ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

**வரட்சியான வானிலை காரணமாக பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



அதனடிப்படையில், பயிர்ச்செய்கை பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகளை ஆரம்பிக்குமாறு விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், எம்பிலிபிட்டிய விவசாயிகளுக்கு வெலிஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து தற்போது குறிப்பிட்டளவு நீர் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 15 - 20 வீதமான செய்கைகளை பாதுகாக்க முடியுமெனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி-5)

## போலி பட்டப்படிப்புகளை

# வழங்கும் 81 கல்வி நிறுவனங்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் தரம் குறைவான பட்டப்படிப்புகளை வழங்கும் சுமார் 81 கல்வி நிறுவனங்கள் இதுவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.மூன்றாம் நிலைக் கல்விக்கான உப குழுக்கூட்டம் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவிப்புகள் மூலம் அத்தகைய நிறுவனங்களின் பெயர்களை வெளியிடுவதற்கு முறையான பொறிமுறையை உருவாக்குவதற்கு துணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

அதுமாத்திரமல்லாமல் குறித்த கல்வி நிறுவனங்களைத் தடை செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.போலியான தேசிய தொழில் தகைமை சான்றிதழ்களை (NVQ) வழங்கும்கல்விநிறுவனங்களைக்கண்டறிந்து அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியிருந்தது.

சான்றிதழின் QR குறியீட்டின் மூலம் போலி சான்றிதழ்களை அடையாளம் கண்டு உரிய முறையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அந்தக் குழு தெரிவித்தது. (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2884

**வித்தியா**

எக்ஸாம் அலப்பறைகள்
எக்ஸாம்ல நல்லா பதில்
தெரிஞ்சா பொயின்ற் பொயின்றா எழுதுவோம்.
கொஞ்சமா தெரிஞ்சா பந்தி பந்தியா எழுதுவோம்.
ஒன்னுமே தெரியலைன்னா...
பக்கம் பக்கமா எழுதுவோம்.



**நிலானி**

செல் இல்லன்னா உயிரினமே
இல்லன்னு அறிவியல் டீச்சர்
அப்போ சொன்னப்ப புரியல...
ஆனா இப்ப நல்லாவே புரியுது.



**கதிசா**

பெண்களைவிட ஆண்கள் வலிமையாக
படைக்க காரணம்...



கிரைண்டர் கல் தூக்க ,சிலிண்டர் எடுக்க
ஸ்கூட்டி சென்டர் ஸ்டான் போட ,பரண் மீது ஏறி
பழைய பொருள் எடுக்க...

**தாருஷ்**

மாமா பொண்ணு ஊர்ல இருந்து வந்திருக்கு.
போய் பாப்போம்..
அங்கிள்- உங்க பையன் எங்க வேலைக்கு போறான்
சதுனம் சரியில்ல... அப்புறம் பாத்துக்குவோம்..




**நரேஷ்**

இந்த சொறி சிரங்கு வந்தவன்
கை கூட கொஞ்ச நேரம் சும்மா இருக்கும்



ஆனா டச்சு ஃபோன் வச்சியிருக்கவன்
கை சத்தியமா கொஞ்ச நேரம் கூட
சும்மா இருக்காது

**விநுயன்**

என்னைய கடைசியா பெத்து விட்டிங்களா...
இல்ல கடைக்கு போறதுக்குனே
பெத்து விட்டிங்களா...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 250





எனவே தப்பி வந்தவன் அந்தக் குடிசை வீடுகளில் ஒன்றில் தான் இருக்க வேண்டும். நந்தினியின் வீட்டுக்குச் சென்று பலகணி வழியாகப் பார்த்தேன் நண்பா! அங்கே நான் கண்ட காட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் என் நெஞ்சில் தீட்டியது போலப் பதிந்திருக்கிறது. ஒரு பழைய கயிற்றுக் கட்டிலில் வீரபாண்டியன் படுத்துக் கிடந்தான். நந்தினி அவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் செய்தாள். அவள் முகம் முன் எப்போதுமில்லாத காந்தியுடன் ஜொலித்தது. அவள் கண்களில் இரண்டு துளி கண்ணீர் ததும்பி நின்றது. என்னை மீறி வந்த ஆத்திரத்துடன் கதவைப் படார் என்று உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே போனேன். காயங்களைக் கட்டிக் கொண்டிருந்த நந்தினி என்னைக் கண்டதும் அதை நிறுத்தி விட்டு முன்னால் வந்தாள். சாஷ்டாங்கமாக என்னை நமஸ்கரித்து எழுந்தாள். கை கூப்பிய வண்ணம், 'ஐயா! நீங்கள் என் பேரில் ஒருநாள் வைத்திருந்த அன்பின் பேரில் ஆணையிட்டு வேண்டுகிறேன்.

இவரை ஒன்றும் செய்யாதீர்கள்! படுகாயப்பட்டுக் கிடக்கும் இவரை உங்கள் கையால் கொல்ல வேண்டாம்!' என்றாள்.

நான் தட்டுத் தடுமாறி, 'உனக்கும் இந்த மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக அவன் உயிரைக் காப்பாற்றும்படிக் கேட்கிறாய்?' என்றேன்.

'இவர் என் காதலர் இவர் என் தெய்வம் இவர் என்னை மணந்து கொள்ளச் சம்மதித்திருக்கும் தயாளன்!' என்றாள் நந்தினி.

"காயம் பட்டிருந்த வீரபாண்டியனைப் பார்த்துக் கொஞ்சம் உண்டாகியிருந்த இரக்கமும் என்னிடமிருந்து அகன்று விட்டது. இந்தப் பாதகன் சண்டாளன், எப்படி என்னைப் பழி வாங்கி விட்டான்! என் இராஜ்யத்தையே கைப்பற்றியிருந்தாலும் பாதகம் இல்லை என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெண்ணரசியையல்லவா அபகரித்து விட்டான்? இவனிடம் எப்படி இரக்கம் காட்ட முடியும்? முடியவே முடியாது!

"நந்தினியை உதைத்துத் தள்ளி விட்டு அவளைத் தாண்டிக் கொண்டு சென்று வாளின் ஒரே வீச்சில் வீரபாண்டியனுடைய தலையை வெட்டி வீழ்த்தினேன். அந்த மூர்க்க பயங்கர செயலை இப்போது நினைத்துப் பார்த்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது.

ஆனால் அச்சமயம் யுத்த வெறியோடு கூடக் குரோத வெறியும் என்னைப் பீடித்திருந்தது. அந்த ஆவேசத்தில் வீரபாண்டியனைக் கொன்றுவிட்டு அந்த வீட்டின் வாசற்படியைத் தாண்டும் போது நந்தினியை ஒரு முறை திரும்பிப் பார்த்தேன்.

அவளும் என்னைக் கண் கொட்டாமல் பார்த்தாள். அதைப் போன்ற பார்வை இந்தப் பூவுலகில் நான் கண்டதில்லை. அதில் காமக் குரோத லோபமோக மத மாற்சரியம் என்னும் ஆறு வித உணச்சிகளும் அத்தனை நெருப்பு ஜுவாலைகளாகக் கொழுந்து விட்டு எரிந்தன. அதன் பொருள் என்னவென்று எத்தனையோ தடவை எண்ணி எண்ணிப் பார்த்தும் எனக்கு இன்று வரை தெரியவில்லை!

"அதற்குள் என்னைத் தேடிக் கொண்டு நீயும் இன்னும் பலரும் வந்து விட்டீர்கள். வீரபாண்டியனுடைய தலையற்ற உடலையும் இரத்தம் சிந்திய தலையையும் பார்த்துவிட்டு எல்லோரும் ஜய கோஷம் செய்தீர்கள். ஆனால் என்னுடைய நெஞ்சில் விந்திய பர்வதத்தை வைத்தது போல் ஒரு பெரும் பாரம் அமுக்கிக் கொண்டிருந்தது!"

### ஐம்பத்தாறாம் அத்தியாயம்
### அந்தப்புர சம்பவம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் காஞ்சியில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி அரசு புரிந்த காலத்தில் நாடெங்கும் மகாபாரதக் கதையைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நரியும் அதன் நிழலும்



ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக்குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய் பெரியதாக தெரிந்தது. நரிக்கு ஏக குஷி. "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். அதுவும் இந்த காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்துகொண்டே வேட்டைக்குச் சென்றது.

செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தை கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கதை விடவும் பெரியதாக இருப்பதாக நினைத்து கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ ரொம்ப சந்தோஷம். நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருபதனால் சிங்கம் என்னை கண்டு பயந்து சென்றது என நினைத்து கொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டிற்கு சென்றது.

மாலை வீட்டிற்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்திற்கு வந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும், "இனிமேல் இந்த காட்டிற்கு நான் தான் ராஜா" என்றது.

யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தை கூறி சிங்கமே என்னைப் பார்த்து பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்த காட்டிற்கு ராஜவாக்குகிறோம்" என்றது.

அடுத்த நாள் நரி அந்த சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதை கண்டு நரி கர்வத்துடன் நின்றது. சிங்கம் வந்தவுடன் சிங்கத்தை பார்த்து, "என் முன்னால் மண்டியிட்டுச் செல்" என்று நரி கூறியது.

சிங்கமோ மிகவும் கோவம் கொண்டு தரக்குறைவாக பேசிய நரியை பார்த்து, "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து செல்" என்றது.

நரியோ சிங்கம் தன்னை கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக் கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது.

அது மதிய நேரம் என்பதால் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அபொழுது தான் நரிக்கு புரிந்தது சூரிய ஒளியில் தான் தன்டைய நிழல் பெரியதாக இருந்தது என்று.

இதை பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரே அடியினால் கொன்றது.

நீதி:

முட்டாள் தனமாக பெரிதாக யோசித்தால் அதற்கான இழப்பும் பெரிதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மதப் பிடிவாதத்துக்கு மூளை இல்லை.அதனால் யோசிக்க முடியாது.இதயமில்லை.அதனால் உணர முடியாது. – ஓகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச மரம் உங்களுடையதல்ல அது எங்களுடையது!

கௌதம புத்தபிரான் இந்து மதத்தைச் சார்ந்தவர். துறவுநிலை நின்று ஞானத்தை அடைந்தவர்.

உலகப் பற்றுதல் அனைத்தையும் துறந்த கௌதம புத்தபிரான் அரச மரத்தின் கீழ் தவமிருந்து முத்திப் பேறு பெற்றார் என்பது வரலாறு.

கௌதம புத்தபிரான் ஓர் இந்துவாக இருந்ததன் காரணமாகவே அவர் அரச மரத்தை தனது தவத்துக்கான விருட்சமாக தெரிவு செய்து கொண்டார்.

அரச மரம் இந்துக்களின் புனித மரம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அரச இலை யில் அவதரித்தார் என்கிறது தசவதார சரிதம்.

தவிர, அரச மரம் விநாயகப் பெருமான் வீற்றிருக்கும் இடமாக வழிபடப்படுகிறது.

இதற்கு மேலாக இந்துக்களின் வழிபாடுகளில் உயர்ந்து நிற்கும் யாக வழிபாட்டில் அரச மரக் கிளை,அரச இலை என்பன யாகத்துக்குரியது என காலத்தால் முந்திய வேதங்கள் உபதேசித்து நிற்கின்றன.

ஆம் யாக வழிபாட்டில் ஆல், அரசு என்பன அக்கினிக்குரியவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு யாக குண்டலத்தில் இடப்படுகின்றன.

இவை தவிர, அரச மரத்தைச் சுற்றி வழிபடுகின்ற மரபு நம் தமிழ் மக்களிடம் உண்டு.

அதேநேரம் தலவிருட்சமாகவும் அரச மரம் போற்றப்படுகின்றது. இவ்வாறு இந்துக்களின் வழிபடு விருட்சமாக விளங்கும் அரச மரத்தை பௌத்தர்கள் தங்களின் வழிபாட்டுக்குரிய விருட்சமாக கருதுவது மிகப்பெரும் தவறு. இதை அவர்கள் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் அரச மரத்தின் சொந்தக்காரர்களாகிய நாம் அதனை விட்டுக் கொடுப்பதும் அரச மரம் இருந்தால், அது ஆபத்து எனக் கருதுவதும் மகா தவறு.

அரச மரம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் விநாயகரை, கிருஷ்ண பகவானை வைரவப் பெருமானை வைத்து வழிபட வேண்டும்.

தவிர, கௌதம புத்தபிரான் ஞானம் பெற்றதற்கு மூலகாரணம் அரச மரம் அன்று. மாறாக அவர் உலகப் பற்றைத் துறந்ததன் காரணமாகவே அவர் பரிநிர்வாணமடைந்தார்.

ஆக, புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் பற்றற்ற வாழ்வு பற்றியே சிந்திக்க வேண்டும்.

அதிலும் பௌத்த துறவிகள் என்றால் அவர்களின் பற்றற்ற வாழ்வு எப்படியாக இருக்க வேண்டும் என்பதை புத்தபிரானின் போதனைகள் மிகத் துல்லியமாக எடுத்துரைக்கின்றன.

ஆக, எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாத தூய மனத்துடன் சகல பற்றுதல்களையும் துறந்து முத்திநிலை வேண்டி வாழுகின்ற வாழ்வே புத்தபிரான் போதிக்கும் புனித துறவாகும்.

ஆனால் இப்போது காலம் எவ்வாறாக மாறியுள்ளது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

எதுவாயினும் அரச மரம் எங்களின் வழிபாட்டு விருட்சம். அதை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது.

# ஜனாதிபதி ரணிலின் ஆட்சியில்த்தான் ஊழல் மோசடி அதிகளவில் இடம்பெறுகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

ஜனாதிபதி ரணிலின் ஆட்சியில்த்தான் ஊழல் மோசடிகள் அதிகளவில் இடம்பெறுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மஹறகமவில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன்தான் ராஜபக்ஷக்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிஹிந்தலைக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியுமாக இருந்தால் ஏன் மெதமுலனவுக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சியில்தான் ஊழல் மோசடிகள் அதிகளவில் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

தரமற்ற மருந்துகளால் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் இதுதான் இவர்களின் சுபீட்சமான நாடா?

இந்த நிலையில், திருமண வீட்டுக்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமல் இருக்கும் நாமல் ராஜபக்ஷ, ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதாவது, தங்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண வேண்டும் என்று அரசியல் மேடையொன்றில் கூறியுள்ளார்.

தங்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி என்றால் நீங்கள் ஒலிவாங்கிக்கு முன்பாக அன்றி, ஜனாதிபதி செயலகத்திற்கு நேரடியாக சென்றே ஜனாதிபதியிடம் இதனைக் கூறுங்கள்.

கொள்ளை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருந்து உங்கள் தரப்பினரை பாதுகாத்து வருகின்றமைக்காக ஜனாதிபதிக்கு நீங்கள் நன்றிகளையும் தெரிவியுங்கள்.

அத்தோடு, மிஹிந்தலை புண்ணிய பூமியில், மின்சாரக் கட்டணம் நிலுவையில் இருந்த காரணத்தினால், அங்கு மின்துண்டிக்கப்பட்டது.

எனினும், தன்னை ஜனாதிபதியாக்கிய ராஜபக்ஷக்களின் மின்கட்டணம் தொடர்பாக ஜனாதிபதிக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.

விகாரைகளுக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியுமாக இருந்தால் ஏன் மெதமுலனவுக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியாது?

ஏனெனில், மெதமுலனவில் ராஜபக்ஷக்களுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்பு உள்ளது.

அரசாங்கத்தின் அனுசரணையுடன்தான் அவர்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதி விபத்து

## இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

மந்துரங்குளிய நகருக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மீது லொறி ஒன்று மோதியதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் காயமடைந்து புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

புத்தளம் ஐயபிம பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சுரேந்திர அனுருத்திக என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் புத்தளம் நோக்கி பயணித்த போது, புத்தளத்திலிருந்து பயணித்த மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதியின் கவனக்குறைவே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

விபத்தில் படுகாயமடைந்த இரு இளைஞர்கள் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அனுருத்திக ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி மந்துராங்குளிய பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு பொலிஸாரால் நால்வர் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டிய பகுதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் என தெரிவிக்கப்படுகின்றது.

பம்பலப்பிட்டி மெரின் டிரைவ் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வாகனம் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்வில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

# பயிற்சி விமானம் விபத்து ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

பயிற்சி விமானம் விபத்திற்குள்ளானமை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று விமானப் படை தளபதி ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானமொன்று சீனன்குடாவில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விமானப்படைக்குச்சொந்தமான பயிற்சி விமானம் ஒன்று திருகோணமலை விமானப்படைத் தளத்தின் சீனன்குடா முகாம் அமைந்துள்ள பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை விமான படையின் சீனன்குடா பொறியியல் பீடத்தில் இலக்கம் 1 பயிற்சித்தளத்தில் விமானிகளை பயிற்சியளிக்க பயன்படுத்தப்பட்ட PT6 வகையைச் சேர்ந்த விமானமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் விமான சோதனைக் கடமைகளுக்காக பயணித்த விமானி மற்றும் பொறியியலாளர் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக விமானப்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று காலை 11.25 இக்கு புறப்பட்ட குறித்த விமானம், 11.27 மணிக்கு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக விசேட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்காக விசேட குழுவொன்று விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது. (ம-7)

# 10 வருடங்களுக்கு ஐ.தே.க ஆட்சியமைக்கும்

## நவீன் திஸாநாயக்க

(கொழும்பு)

அடுத்த 10 வருடங்களுக்கு நாட்டின் ஜனாதிபதியாக ஐ.தே.க வின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே செயற்படுவார் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவிற்கு அதிகமானோர் ஜனாதிபதி தேர்தலின்போது வாக்களித்திருந்தனர்.

ஐ.தே.க சார்பில் பாராளுமன்றில் ஒருவர் மாத்திரமே இருந்தார்.அவரால் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கமுடிந்துள்ளது.

எனவே, ஐ.தே.க ஜனாதிபதியின் தலைமையில் எதிர்வரும் 10 வருடங்களுக்கு இலங்கையில் ஆட்சியமைக்கும் என நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

35




கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


### அனிகங்கா (1209)

அனிகங்கா பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொலன்றுவையின் மன்னராக இருந்தார், அவர் 1209 ஆண்டில் 17 நாட்கள் மட்டுமே ஆட்சி செய்தார். அவர் அரியணையைக் கைப்பற்ற சோழர்களுடன் கூட்டுச் சேர்ந்து பொலன்றுவை மீது படையெடுத்திருந்தார். இதன் பின்னனியைப் பார்ப்போமானால் பொலன்றுவை இராச்சியத்தின் இராணுவம் சிம்மாசனத்தைக் கைப்பற்றி அரியணைக்கு குழந்தையான தர்மசோகாவை நியமித்தது. இதற்கிடையில், அனிகங்கா சோழ நாட்டிற்குள் ஒரு படையை ஒழுங்கமைத்தான்.

இந்த இராணுவம் பின்னர் பொலன்னறுவை மீது படையெடுத்து, பொலன்னறுவை இராணுவத்திற்கு தலைமை தாங்கிய அயஸ் மந்தவையும் வாரிசு தர்மசோகனையும் படுகொலை செய்தது. அனிகங்கா ஒரு குறுகிய காலம், 17 நாட்கள் ஆட்சி செய்தார். இதன் பின்னர் பொலன்றுவை இராணுவம் லீலாவதியை அரியணையில் ஏற்றியது. லீலாவதி மீண்டும் தூக்கியெறியப்படும் வரை மிகக் குறுகிய காலம் மட்டும் ஆட்சி செய்தார்.

### அரசி லீலாவதி (1209-1210) (விஜயபாகு வம்சம்)

அரசி லீலாவதி என்பவர் இலங்கை வரலாற்றில் தனது சொந்த உரிமையில் இறையாண்மையாக ஆட்சி செய்த நான்காவது பெண் ஆவார். பொலன்றுவை இராச்சியத்தின் அரசரான முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவியாகப் பிரபலமடைந்திருந்த இவ்வரசி இடையிடையே மூன்று தடவைகள் பொலன்றுவையின் ஆட்சி பீடம் ஏறினாள்.

கணவனின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட சிம்மாசன உரிமையைப் போராட்டத்தின் போது அரச உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அரசியலுக்கு வந்தாள். இவள் முதல் தடவை கி.பி 1197 - 1200 காலத்திலும் இரண்டாம் தடவை கி.பி. 1209 - 1210 காலத்திலும் ஆட்சி செய்தாள்.

### லோகிஸ்ஸர (1210-1211)

லோகிஸ்ஸர ஒரு இராணுவச் சிப்பாய் ஆவான். இவன் நிசங்க மல்லனுக்கும் சஹஸ்ஸமல்லாவுக்கும் உறவினர் என்று கூறப்படுகிறது. இவன் வெளிநாட்டில் ஒரு இராணுவத்துடன் சேர்ந்து பொலன்றுவை இராணுவத்தை தோற்கடித்து அரசி லீலாவதியை பதவி நீக்கம் செய்தான்.

இவன் 1210 முதல் 1211 வரை ஒன்பது மாதங்கள் ஆட்சி செய்தான். அவர் 9 மாதங்கள் ஆட்சி செய்த பிறகு பராக்கிரமா என்ற சிப்பாய் அவரை அரியணையில் இருந்து அகற்றி லீலாவதி தேவியை மீண்டும் மூன்றாவது முறையாக அரியணையில் அமர்த்தினார்.

### அரசி லீலாவதி (1211-1212) (விஜயபாகு வம்சம்)

அரசி லீலாவதி என்பவர் கணவன் முதலாம் பராக்கிரமபாகுவின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட சிம்மாசன உரிமையைப் போராட்டத்தின் போது அரச உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அரசியலுக்கு வந்தவள் என்று கூறியிருந்தோம். இவள் மூன்றாவது தடவையாக கி.பி 1211-1212 காலத்தில் ஆட்சி செய்தாள்.

இவளது ஆட்சிக் காலத்தில் இவளுக்கு கீர்த்தி எனும் தளபதியின் உதவி கிடைத்தது. சோழப் படையெடுப்புகள் மூன்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. தடைகளுக்கு மத்தியிலும் புத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காகவும் கலை மற்றும் இலக்கிய படைப்புகளுக்காகவும் உழைத்தாள். அவள் காலத்தில் நாணயக் குத்திகள் வெளியிடப்பட்டன.

### பாண்டியன் வம்சம் இரண்டாம் பராக்கிரம பாண்டியன் (1212-1215)

பொலன்றுவை பாண்டுபராக்கிரமபாகு அல்லது பராக்கிரமபாண்டு என்று அழைக்கப்படும் இரண்டாம் பராக்கிரம பாண்டியன் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொலன்றுவை இராச்சியத்தின் மீது படையெடுத்து 1212 முதல் 1215 வரை ஆட்சி செய்த பாண்டிய மன்னன் ஆவான். அதன் பின் கலிங்க மாகன் மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தார் அவருக்குப் பின் வந்த கலிங்க மாகன் பொலன்றுவையைக் கைப்பற்றி இவனை சிறைபிடித்தார்.

### கலிங்க வம்சம் கலிங்க மாகன் (1215-1236)

கலிங்க மாகன் 1215 ஆம் ஆண்டளவில் அதாவது 13 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அக் காலத்தில் இலங்கையின் தலை நகரமாக விளங்கிய பொலநறுவையைக் கைப்பற்றி 21 ஆண்டுகள் வரை ஆண்டவன் ஆவான். இவனது ஆட்சிக்காலம் 21/40/44 வருடங்கள் என வெவ்வேறு ஆவணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாளிமொழியிலுள்ள சிங்கள வரலாற்று நூல்கள் மாகன் கலிங்க நாட்டிலிருந்து 24,000 வீரர்களைக் கொண்ட படையுடன் இலங்கையில் இறங்கியதாகக் கூறுகின்றன. பௌத்த மதத்துக்கு எதிரான இவனது ஆட்சி இலங்கை வரலாற்றில் பெரும் தாக்கங்களை உருவாக்கியது ஒரு புறம் இருக்க யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி அரச பரம்பரையை உருவாக்கியவனும் இவனே என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கலிங்க மாகனிற்கு வழங்கப் பெற்ற மற்றைய பெயர்கள் காலிங்க விஜயபாகு, விஜய காலிங்கச் சக்கரவர்த்தி, விஜயகாலிங்கன், விஜயகூளங்கை ஆரியன், விஜயபாகு காலிங்கன், ஷோடகங்கன் என்பனவாகும்.

கலிங்கமாகன், வடகிழக்கில் முன்னர் இருந்த இராச்சியத்தையும் கைப்பற்றிவிட்டான். திருக்கோணமலை, கொட்டியாரம், ஊர்காவற்துறை, மன்னார், மாதோட்டம், பதவிய, குருந்தனூர் (முல்லைத்தீவுமாவட்டம்) முதலான இடங்களிலே படை நிலைகளை அமைத்தான் என்று சொல்லப்படுகிறது. அவன் விஜயபாகு என்ற பெயரினை கொண்டிருந்தான் என்று 14 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நிகாய சங்கிரகய என்ற நூல் குறிப்பிடுகின்றது. அவன் வழங்கிய சாசனங்களோ நாணயங்களோ இதுவரை கிடைக்கவில்லை.

இராசரட்டை நாகரிகமானது பொதுவாக எதிரிகளின் ஆக்கிரமிப்பு, பலவீனமான மன்னராட்சி மத்திய நிர்வாகம் சீர் குலைந்ததமை போன்ற நீண்ட காலக் காரணிகளுடன் சோழரது படையெடுப்பு கலிங்க மாகனின் படையெடுப்பு என்ற உடனடிக் காரணங்களால் வீழ்ச்சியுற்று அரசியல் வானிலிருந்து மங்கி மறைந்தது.

என்.சரவணன் தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் "இலங்கையின் வரலாற்றில் வெளியாரின் ஆக்கிரமிப்புகளால் கவிழ்க்கப்பட்டதை விட உள்வீட்டுச் சதிகளால் பறிக்கப்பட்ட ஆட்சிகளின் வரலாறு மோசமானது. கசப்புமிக்க கறை படிந்தது. இலங்கையின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம், தீபவம்சம், ராஜாவலிய போன்ற நூல்களின் படி ஆட்சியைப் பிடிப்பதற்காக சொந்த இரத்த பந்தங்களை எப்படியெல்லாம் கொன்று ஆட்சிகளை நிறுவினார்கள் என்பதை அறிந்தால் வியப்பாக இருக்கும். "ராஜாவலிய" (அரச வம்சவழி) நூல் இலங்கையில் ஆட்சி செய்த 194 அரசர்களைப் பற்றிய குறிப்புகளைக் கூறுகிறது. அதில்175 அரசர்கள் சிங்களவர்கள். சிங்கள அரசர்களில் 5 பேர் தமது தந்தைமாரைக் கொன்று ஆட்சிக் கட்டிலேறியவர்கள். 60 பேர் அரசர்களைக் கொன்று அரசர்களானவர்கள். 53 பேர் தமது சொந்த சகோதரர்களைக் கொன்று அரசர்களானவர்கள். 30 பேர் அரசனைக் கொன்று அரசேறிய படையினர்கள். அரசனைக் கொன்று அரசேறிய அரசியொருவரும் உண்டு. அரசனைக் கொன்று ஆட்சியேறிய வாசல்காவலனும் உண்டு. அரச வம்சத்தின் பிரகாரம் உரியமுறையில் ஆட்சியேறிய அரசர்கள் 25 பேர் மாத்திரமே. இவை வியப்பைத் தரும் தகவல்கலாயினும் சுவாரசியமாக பதியக்கூடிய வரலாற்றுத் தகவல்கள்".

பொலன்றுவை வீழ்ச்சியின் பின்னர் இந்நாட்டு வரலாற்றில் மிகக் குறுகிய காலத்திற்கு மட்டும் நிலைத்திருந்த இராசதானிகள் பல தோன்றியிருந்தன. தென்மேற்கில் உருவாகி குறுகிய காலத்தில் வீழ்ச்சி அடைந்த தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல, கம்பளை, கோட்டை எனும் இராசதானிகளுக்கு மேலதிகமாக யாழ்ப்பாண இராச்சியமும் இக் காலத்தில் காணப்பட்டது. இவ்வரசுகளைப் பற்றிய விடயங்களையும் இக் காலத்தில் பாவனையில் இருந்த நாணயங்கள் பற்றியும் அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54 கிலோ...

துடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இருவர் தப்பியோடியுள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, கஞ்சாவை மீட்டுள்ளதுடன், கிளிநொச்சி தர்மபுரம் பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனையும் மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் கையளித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## மோ.சைக்கிள்...

உயிரிழந்துள்ளார்.

இதில் துன்னாலை மத்தியைச் சேர்ந்த சங்கர் சஞ்சீவன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 01.08.2023 அன்று மோட்டார் சைக்கிள் பழகும்போது, மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,33,60,104)

## சர்வகட்சி...

முற்படுகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஏதேனும் யோசனைகள் இருந்தால், இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அரசியல் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது அர்த்தமற்ற ஒரு செயற்பாடாகும். மக்களை முட்டாளாக்கும் ஒரு விடயமே இது. நாம் எப்படி யோசனைகளை முன்வைக்க முடியும்?

சர்வகட்சி மாநாடு நடைபெற்ற போது, பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்னர் இருந்த 7 ஜனாதிபதிகளால் இதனை செய்ய முடியாமல் போனது. இதற்கான காரணத்தை முதலில் கண்டறிய வேண்டும்.

மக்கள் ஆணை உள்ள ஜனாதிபதிகளாலேயே இதனை செய்ய முடியாவிட்டால், மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதியால் எப்படி செய்ய முடியும்.

அத்தோடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குத்தான் பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளது.

அந்தக் கட்சிக்கு இதில் உடன்பாடு இல்லை எனும் போது அரசாங்கம் இந்த செயற்பாட்டை எப்படி மேற்கொள்ளும். இந்த நிலையில், எமது யோசனைகளும் கோரப்பட்டுள்ளது.

யாரை ஏமாற்ற இதனை செய்ய வேண்டும்? இந்தச் செயற்பாட்டை வெற்றிகரமாக ஆரம்பிக்கும் முன்னர், அரசாங்கத்திற்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும்.

மாகாண சபைகள் அனைத்தும் இன்று செயலிழந்துள்ளன. இதன் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு கீழ் வந்துள்ளன.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், இப்போதைக்கு தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்கும்போது, மக்களை முட்டாளாக்கும் வகையில்தான் ஜனாதிபதி இந்த செயற்பாட்டை மேற்கொள்கிறார்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## செயலாளர்...

பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

அந்தச் சமயத்தில் இந்தியாவில் தங்கியிருந்த எம்.கே.சிவாஜிலிங்கம், அதற்கு முரணான - முற்றிலும் நேர்மாறான கோரிக்கையை வலியுறுத்தி மோடிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தர். அவரது கடிதத்தில் சர்வஜன வாக்கெடுப்பை கோரியிருந்தார்.

இந்நிலையில் கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்து எம்.கே. சிவாஜிலிங்கத்தை விலகுமாறு கட்சி தலைமையால் கோரப்பட்டிருந்தது. அவர் பதவி விலகாததையடுத்து, கட்சியை விட்டு நீக்கப்படுவதாக நேற்று முன்தினம் நடந்த கட்சியின் தலைமைக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சிவாஜிலிங்கமோ சிறிகாந்தாவோ எதுவிதமான கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. (ம-7,33)

## 54 வயது...

டன் காதல் காரணமாகவே குறித்த நபர் தாக்கப்பட்டார்என குற்றம்சாட்டப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபருக்கும் 19 வயது யுவதிக்குமிடையே காதல் மலர்ந்த நிலையில் அவர்கள் இருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதாக கூறிய உறவினர்கள், அவர்களை ஊருக்கு வருமாறு கூறியுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரும் நேற்றையதினம் ஊருக்கு வந்தவேளை குறித்த நபர் மக்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்குஉள்ளான நபரை தெல்லிப் பழை வைத்தியசாலைக்கு சுன்னாகம் பொலிஸார் அனுப்பி வைத்தவேளை, அவரது உயிர் இடைவழியில் பிரிந்தது.

இச்சம்பவம் தொடர்பில் 6 பேர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,33, 104)

## நாட்...

கடுமையான வரட்சி காரணமாக ஏரிகள், குளங்களில் நீர் நிலைகள் வற்றியுள்ளன. இதனால் விவசாய நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் கால்நடைகளுக்குத் தேவையான குடிநீர் கிடைக்காத நிலையும் தோன்றியுள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்தில் வரட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக சுமார் 70 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்தளாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரி வித்துள்ளது.

நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக 12 மாவட்டங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வரட்சியால் இதுவரை 48,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம் அந்த மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## 10 இந்திய...

ஈடுபட்டிருந்த 10 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்திய படகு ஒன்றையும் கடற்படையினர் கையகப்படுத்தியுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

மெகா பவர்
திகதி 07/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1547
A 04 09 32 33 65
56174

தன நிதானய
திகதி - 2023.08.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1229
E 30 50 52 62 E
37786

Lucky 7
திகதி 07.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0025
L7 இலக்கம் 2 6
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 8 5 0 4 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3441
சீட்டிழுப்பு திகதி 07.08.2023
V 11 32 64 71
V 12183

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 508
சிம்மம் 15 23 37 55 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/07
சீட்டிழுப்பு இலக்கம் 5199
L 8 7 5 7 7 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2173 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.08.07 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 40 47 73 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,645,228.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 24 43 48 49 N

சனிதா
திகதி 2023.08.07 வெற்றி வாரம் 4334 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 31 39 41 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,499,368.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 21 48 52 J

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3885 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.07 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 25 38 55 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,971,472/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" 06 29 57 62

கப்ருக
திகதி 07.08.2023 வெற்றி வாரம் 1349 வர்ணம் பச்சை
R 33 11 30 56 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.425,470,184.20
கப்ருக "இரண்டாவது வாய்ப்பு" 18 39 48 62 I

ஜயோதா Jayoda
திகதி 2023.08.07 வெற்றி வாரம் 1945 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 22 44 48 67 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,279,495.20
ஜயோதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 41 46 59 64 R

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2173 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.08.07 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 40 47 73 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,645,228.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 24 43 48 49 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவில் இன்று விசேட மருத்துவ முகாம்

(மண்டைதீவு)

மண்டைதீவில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 12.00 மணி வரை விசேட மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

மண்டைதீவு பிரதேச வைத்தியசாலையில் இடம் பெறும் இம்மருத்துவ முகாமில் மருத்துவ நிபுணர்கள் பலரும் பங்கு பற்றவுள்ளனர்.

மண்டைதீவு வைத்தியசாலை நிர்வாகம், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலண்டனில் வதியும் மருத்துவ நிபுணர் செல்வ லிங்கம் தெய்வக்குமார் அவர்களின் வழிப்படுத்தலில் நடைபெறும் இம் மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இதய மருத்துவ பரிசோதனை, கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன. (ம)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 40-65
(யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் முன்னுரிமை)

076 097 3121


# வவுனியாவில் பல்வேறு இடங்களில் திருட்டு மற்றும் வழிப்பறி

## 6 பேர் கைது; கார்,2 மோ.சைக்கிள்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு இடங்களில் வீதியில் வழிமறித்து நகைகள் திருடிய சம்பவங்கள் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கார் மற்றும் இரண்டு மோட்டர் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

தம்பனை பகுதியைச் சேர்ந்த இருவரும், பெரியதம்பனை பகுதியைச் சேர்ந்த இருவரும், குட்செட் வீதி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒருவருமாக 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த 6 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காரில் வைத்தியசாலை சேவையில் பணியாற்றுபவர்கள் பயன்படுத்தும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

### தமிழினம்...

மாணவர்கள் இதனை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது. நம் தமிழ் மாணவர்கள் ஒரு தரத்துடன் உயர்தர பரிட்சையினை எழுதுவதை கைவிடுகிறார்கள். அவ்வாறில்லாமல் இரண்டாம் மூன்றாம் தடவைகளும் தோற்றி பல்கலைக்கழகம் வரவேண்டும். அதிகளவான தமிழ் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.பேராசிரியர்கள் பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு கருத்தரங்குகளினை நடாத்தி அவர்களினை ஆற்றுப்படுத்தவேண்டும்.

இன்று இலங்கையில் 18 பல்கலைக்கழகங்கள் உள்ளனஏனைய மொழி பேசுபவர்களுக் காக போதியுளவு பல்கலைக்கழகங்கள் உள்ளன .ஆனால் இப் பல்கலைக்கழகம் இச் சமூகத்தின் நலனிற்காகவே உருவாக்கப்பட்டது. அவ்வாறிருக்க இதனையும் நாங்கள் அடகு வைப்போமேயானால் அது அர்த்தமற்றதாக போய்விடும் என்றார்.(ம-7)

### ரணில்...

அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பில் இந்த விசேட உரையின் போது ஜனாதிபதி தெளிவுபடுத்தவுள்ளார்.

இதேவேளை 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சித்தாலும் எதிர்க்கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும் இவ்விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வராமையானது ஜனாதிபதியின்அந்த முயற்சிகளுக்குத் தடையாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ம)


## காணி விற்பனைக்கு



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி 3ம் ஒழுங்கை (முத்துமாரி அம்மன் கோயில்) அருகே 4,1/4 பரப்பு விற்பனைக்கு உண்டு.
விலை பேசி தீர்மானிக்கப்படும்
(தரகர் அவசியமில்லை)
(16652)

077 892 8094
077 707 8292

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16657)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 12 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- புதிய செம்மணி வீதி
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சத்து எண்பது

(16655)

077 638 5683,076 755 8606

யாழ் வீரசிங்க மண்டபத்தில்

## இன்று மட்டும்

## ஆடி மாத ஆடை தள்ளுபடி

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்




திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம்: 08.08.2023 மட்டுமே
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(16653)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)
T.P:077 544 8503

## வட்டுக்கோட்டையில்

தேங்காய்கள் உடன் தொகைக்கு விற்பனைக்கு உண்டு.சகல அளவுகளிலும் சணல் கிடாய்கள் ஜோடியாக விற்பனைக்குண்டு.
விலை 140,000/-
(16654)
076 896 6929
021 225 1380

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7026)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7026)
VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org